# ஏர்க்களம்

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# வேளாண்மை அறிவியல் நிலையம்
## விருத்தாசலம் - கடலூர் மாவட்டம்

ICAR

அக்டோபர் – டிசம்பர், 2018

சிறப்பு ஆசிரியர்
முனைவர். ஹெ. பிலிப்
விரிவாக்க கல்வி இயக்குனர்

ஆசிரியர்
முனைவர். சு.கண்ணன்
திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர்
முனைவர். க.நடராஜன்
உதவி பேராசிரியர் (விதை அறிவியல்)

ஆசிரியர் குழு
முனைவர். த. மருதாசலம்
முனைவர். அ. இரமேஷ் குமார்
முனைவர். க. வேங்கடலட்சுமி
முனைவர். ம. பாலருபினி

தொழில்நுட்ப உதவிக் குழு
திருமதி. க. மீனலட்சுமி
திரு. த. குமார்
திரு. மெ. செல்வி






**அன்பார்ந்த உழவர் பெருமக்களே!**
**வணக்கம்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 13 வது துணைவேந்தராக முன்னாள் முதன்மையர் (தோட்டக்கலை) முனைவர் என். குமார் அவர்கள் 16.11.2018 அன்று பொறுப்பேற்றார். இவர் தனது இளமறிவியல் (தோட்டக்கலை), மூதறிவியல்(தோட்டக்கலை) மற்றும் முனைவர் பட்டப்படிப்பை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயின்று தனித்துவ கல்விப் பதிவுகளுடன் பட்டம் பெற்றார். இவர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 36 ஆண்டுகளுக்கு மேல் கல்வி,ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப்பணிகளில் சிறப்பாக பணியாற்றியவர். குறிப்பாக 22 ஆண்டுகளுக்கு மேல் தோட்டக்கலைத்துறையில் பேராசிரியராகவும், பண்ணை மேலாண்மையில் 16 ஆண்டுகால அனுபவமும், நிர்வாக பணிகளில் 12 ஆண்டுகால அனுபவமும் கொண்டவர். இவர் எழுதிய மூன்று தோட்டக்கலை சம்பந்தமான பாடப் புத்தகங்கள் மாணவர்களால் 'வேதாகமம்'(Bible) என்று அழைக்கப்பட்டது, மேலும், இந்த புத்தகங்கள் UPSC தேர்வு எழுதுபவர்களுக்கு பாடப்புத்தகமாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவர் இரண்டு முனைவர் பட்டப்படிப்பு மாணவர்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) ' ஜவஹர்லால் நேரு கௌரவ பரிசை' பெற்றனர். புதிய துணைவேந்தரின் சீரிய தலைமையில் நமது வேளாண்மை அறிவியல் மையத்தின் செயல்பாடுகளை வழங்கிடுவோம் என உறுதியளிக்கிறேன்.

கடலூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 2 வயல்வெளி ஆய்வையும் 10 முதல்நிலை செயல்விளக்கத்திடல்களையும் இந்த காலாண்டில் நடத்தி வருகிறோம். நெற்பயிரின் புதிய இரகமான கோ ***52***, டி.கே.ம் 13, உளுந்தில் புதிய இரகமான மதுரை 1, நிலக்கடலையில் வி.ஆர்ஜ 8, பண்ணைக்குட்டையில் கூட்டுக்கெண்டை மீன் வளர்ப்பு மற்றும் நெல், நிலக்கடலை, முந்திரி, கத்தரி, வெண்டை பயிர்களில் பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளைப் பற்றி செயல் விளக்கத்திடல்கள் நடத்தி வருகிறோம். நமது நிலையத்திலும் பல்வேறு செயல்விளக்கத்திடல்கள் அமைத்து நிலையப்பயிற்சி மற்றும் களப்பயிற்சிகளையும் சிறப்பாக நடத்தி வருகிறோம். இந்த காலாண்டில் எமது செயல்பாடுகள் குறித்து சுருக்கமாக விவரித்துள்ளோம். எனவே உழவர்கள் அனைவரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் இணைந்து விளைச்சலை பெருக்கி வருமானத்தை அதிகப்படுத்துவோம் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்
ஆசிரியர் குழு

## கடலூர் மாவட்டத்தில் நெல்லில் புதிய இரகமான கோ 52 ஆதார விதை உற்பத்தி பரவலாக்கம் குறித்த முதல்நிலை செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக 2018-19 ம் ஆண்டு திட்ட அறிக்கையில் படி நெல்லில் புதிய இரகமான கோ 52 மணிகுடியான்இருப்பு மற்றும் அகரம் ஆலம்பாடி கிராமத்தில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்விளக்கத்திடலுக்கும் 30 கிலோ கோ 52 வல்லுனர் விதை நெல் வழங்கப்பெற்றது. செயல்விளத்தத்திடலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஓழுங்கிணைப்பாளர் முனைவர். S. கண்ணன் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.K. நடராஜன் (விதை நுட்பவியல்), முனைவர் S.மருதாசலம், அவர்கள் 12.10.18 அன்று ஆய்வு செய்தனர். விதை சான்றளிப்பு அலுவலர் திருமதி.சுகந்தி அவர்கள் 24.12.2018 அன்று வயலாய்வு செய்து கலவன்களை அகற்றும் முறைப் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைத்தார். ஆய்வின்போது உதவிப் பேராசிரியர் முனைவர்.K. நடராஜன் அவர்கள் விதை உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், விதைகளை அடுத்த பருவத்துக்கும் உற்பத்தி செய்து பரவலாக்கம் செய்யுமாறு உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.



## கடலூர் மாவட்டத்தில் நெல்லில் புதிய இரகமான டி.கே.ம் 13 ஆதார விதை உற்பத்தி பரவலாக்கம் குறித்த முதல்நிலை செயல்விளக்கம்

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக 2018-19 ம் ஆண்டு திட்ட அறிக்கையில் படி நெல்லில் புதிய இரகமான டி.கே.ம் 13 மணிகுடியான்இருப்ப மற்றும் ஆழிச்சிகுடி கிராமத்தில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்விளக்கத்திடலுக்கும் 30 கிலோ டி.கே.ம் 13 ஆதார விதை நெல்



வழங்கப்பெற்றது. செயல்விளத்தத்திடலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஓழுங்கிணைப்பாளர் முனைவர். S. கண்ணன் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.K. நடராஜன் (விதை நுட்பவியல்), முனைவர் S.மருதாசலம், அவர்கள் 24.11.18 அன்று ஆய்வு செய்தனர். விதை சான்றளிப்பு அலுவலர் திருமதி.சுகந்தி அவர்கள் 24.12.2018 அன்று வயலாய்வு செய்து கலவன்களை அகற்றும் முறைப் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைத்தார். ஆய்வின்போது உதவிப் பேராசிரியர் முனைவர்.K. நடராஜன் அவர்கள் விதை உற்பத்தி மற்றம் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், விதைகளை அடுத்த பருவத்துக்கும் உற்பத்தி செய்து பரவலாக்கம் செய்யுமாறு உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.



## கடலூர் மாவட்டத்தில் உளுந்தில் புதிய இரகமான மதுரை 1 ஆதார விதை உற்பத்தி பரவலாக்கம் குறித்த முதல்நிலை செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக 2018-19 ம் ஆண்டு திட்ட அறிக்கையில் படி உளுந்தில் புதிய இரகமான மதுரை 1 புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் 10 செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு செயல்விளக்கத்திடலுக்கும் 8 கிலோ மதுரை 1 ஆதார விதை வழங்கப்பெற்றது. செயல்விளத்தத்திடலை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒழுங்கிணைப்பாளர் முனைவர். S. கண்ணன் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.K. நடராஜன் (விதை நுட்பவியல்) அவர்கள் 26.10.18 அன்று ஆய்வு செய்தனர். விதை சான்றளிப்பு அலுவலர் திருமதி.விஜயா அவர்கள் 24.12.2018 அன்று வயலாய்வு செய்து கலவன்களை அகற்றும் முறைப் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைத்தார். ஆய்வின்போது உதவிப் பேராசிரியர் முனைவர்.K. நடராஜன் அவர்கள் விதை உற்பத்தி மற்றம் பராமரிப்பு முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், விதைகளை அடுத்த பருவத்துக்கும் உற்பத்தி செய்து பரவலாக்கம் செய்யுமாறு உழவர்களுக்கு எடுத்துரைத்தார்.



## ளூடன் ஒவ்வாமைக்கு ஏற்ற சிறுதானிய பிஸ்கெட் மற்றும் பாரம்பரிய அரிசி பிஸ்கெட் ஒப்பிடுதல் பற்றி ஆய்வுசெய்தல்



விருத்தாசல வட்டாரத்தைச்சேர்ந்த குணமங்கலம், ஆலிச்சிக்குடி போன்ற கிராமங்களில் பாரம்பரிய இரகங்களை பரவலாக்கம் செய்வதற்காக வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் வயல் வெளி ஆய்வு நடத்தப்பட்டது. பண்ணை மகளிரை தேர்வு செய்து அவர்களிடையே சிறுதானிய பிஸ்கெட தயாரிப்பு மற்றும் பராம்பரிய அரிசி பிஸ்கெட் தயாரிப்பு இரண்டும் ஒப்பிடுதல் செய்யப்பட்டது. க்ளூடன் ஒவ்வாமை பற்றி மகளிரிடையே விளக்கம் அளிக்கப்பட்டு, பல பராம்பரிய இரகங்களையும் காண்பிக்கப்பட்டது. இதன் மூலம் சிவப்பு கவுனி அரிசியில் தயாரிக்கப்பட்ட பிஸ்கெட் சிறுதானிய பிஸ்கெட்டைவிட மிகுந்த சுவையும் ஒவ்வாமை திறன் இன்றியும் காணப்பட்டது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சு.கண்ணன் செயல்விளக்கம் அளித்தார்.



## வெண்டையில் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரகங்களை ஆய்வு செய்தல்



கடலூர் மாவட்டத்தில் சுமார் 200 எக்டர் பரப்பளவில் வெண்டை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிரில் மஞ்சள் தேமல் நரம்பு வைரஸ் நோய் பெரிதும் சேதாரம் விளைவிக்கின்றது. எனவே இந்நோயிற்கு எதிர்ப்பு சக்தி உடைய, உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரகங்களின் தேவை அவசியமாகிறது. இந்நோக்கத்தோடு, இம்மாவட்டத்தில், வீரிய வெண்டை ஒட்டு இரகங்களான கோ 4 மற்றும் அர்க்காநிகிடா ஆகியவை வயல்வெளி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது எருமனூர், சின்னவடவாடி,வடக்குப்பம் போன்ற கிராமங்களில் 5 திடல்களில் தற்போது நடைபெற்று வருகின்றது. நடவு செய்த 30ம் நாள் மேற்கொண்ட ஆய்வுக்குறிப்பில், இரு இரகங்களிலும், மஞ்சள் நரம்புத்தேமல் நோயினை தாக்குதல் ஏதும் தென்படவில்லை.



## பருத்தியில் பாரா வாடல் நோய் கள ஆய்வு மற்றும் வயல்வெளி ஆய்வு



கடலூர் மாவட்டம் நல்லூர் வட்டாரத்தில் பரவலாக பருத்தி சாகுபடி செய்யப் படுகின்றது. மழைக்காலங்களில் பாரா வாடல் நோயினால் அதிகப்படியான செடிகள் காய்ந்து பயிர் எண்ணிக்கை குறைந்து விடுகின்றது. அவ்வாறு பாதிக்கப்பட்ட மருவத்தூர் கிராமத்தில் 15.10.2018 அன்று நமது வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி முனைவர் சு.மருதாசலம், நல்லூர் வட்டார உதவி வேளாண்மை இயக்குநர் மற்றும் வேளாண் அலுவலர் கொண்ட குழு பார்வையிட்டு அதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டது. அதைத் தொடர்ந்து 16.10.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலத்திலிருந்து விஞ்ஞானிகள் சு.மருதாசலம் மற்றும் க.நடராஜன் கொண்ட குழு வயல்வெளிஆய்வு மூலம் விவசாயிகளுக்கு பாரா வாடல் நோயைக்கட்டுபடுத்தும் முறைகள் குறித்து பயிற்சி அளித்தனர். இதில் அப்பகுதி விவசாயிகள் 20 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



## நெல் மற்றும் உளுந்து சாகுபடி களப்பயிற்சி



தொரவளூர் கிராமம், விருத்தாசல வட்டாரத்தில் 03.10.2018 அன்று நெல் மற்றும் உளுந்து சாகுபடி களப்பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் திருந்திய நெல் சாகுபடி மற்றும் மேம்படுத்தப்பட்ட உளுந்து சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 38 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

